(குறுக்கீடுகள்) எந்த விதியின்கீழ் 4 பேர் நின்றுகொண்டு இருக்கிறீர்கள்? முறை இல்லை, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) தாமரைக்கனி உட்காரவேண்டும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையை இப்போது பேரவைக்கு வைப்பார்கள். (குறுக்கீடுகள்)

3. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

தென்னாற்காடு–வள்ளலார் மாவட்டம், முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில் ஒரு பெண் சந்தேகமான முறையில் மரணம் அடைந்தது குறித்தும், அதுபற்றி அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முத்தாண்டிக்குப்பம் சம்பந்தமாக (குறுக்கீடுகள்) இல்லை, அதைதான் நான் சொல்கிறேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இல்லை, அதுபற்றியும் சொல்லிவிடுகிறேன். இல்லை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மற்றும் திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி. பழனிசாமி, திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன், திரு. பரிதி இளம்வழுதி, திரு. சா. பன்னீர்செல்வம் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். அவர்கள் அறிவிப்புகொடுப்பதற்கு முன்னரே இந்தப் பிரச்சினைப் பற்றி பேரவைக்கு விதி 110-ன்கீழ் அறிக்கை வைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரி இருந்த காரணத்தால், உறுப்பினர்களுக்கு அனுமதி மறுத்திருந்தேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு–வள்ளலார் மாவட்டம், முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில், வசந்தா என்கின்ற பெண்மணி, சந்தேகமான முறையில் மரணம் அடைந்து கிடந்தது குறித்தும், அது தொடர்பாக தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், இந்த மாமன்றத்தில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, சில விவரங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஒரு அறிவிப்பினையும், இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

1994 மார்ச் 25] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

சந்தேகத்திற்கு இடமான வகையில், மரணம் அடைந்து கிடந்த திருமதி வசந்தா என்பவர், பேர்பெரியான் குப்பம் என்ற கிராமத்தில், தன்னுடைய மாமன் ஆன திரு. நடேசன் என்பவரை, 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டு, குடும்பம் நடத்தி வந்துள்ளார். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்துள்ளன. 14-3-1994 அன்று திருமதி வசந்தா, கள்ளத் தொடர்பு வைத்து இருந்ததாகக் கூறப்படும், அதே கிராமத்தைச் சேர்ந்த, ஆறுமுகம் என்பவரின் மகன், சீனிவாசன் என்பவருடன், கிராமத்தை விட்டு, யாருக்கும் தெரியாமல் வெளியேறிவிட்டு இருக்கிறார். அதைத் தொடர்ந்து திரு. நடேசன், தனது மனைவி வசந்தாவை, சீனிவாசன் என்பவர் கடத்திச் சென்றுவிட்டார் என்று, 17-3-1994 அன்று, முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்தில், புகார் ஒன்றைக் கொடுத்துள்ளார்.

காவல் துறையினர், அந்தப் புகாரின்மீது, புலன் விசாரணை மேற்கொண்டு இருக்கும்போது, 22-3-1994 அன்று காலை, 11.30 மணிக்கு, திருமதி வசந்தா மற்றும் சீனிவாசன் ஆகிய இருவரும், முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையத்திற்கு வந்து, காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. சதாசிவம் முன்பு, தாங்களாகவே சரண் அடைந்து உள்ளார்கள். சரணடைந்த பின்பு, 22-3-1994 அன்று, குற்ற எண் 96/94-ல், வழக்கு ஒன்றை, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 366-ன்கீழ், காவல் நிலைய உதவி ஆய்வாளர் பதிவு செய்து, அன்றே முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளார்.

23-3-1994 அன்று, காலை 7-45 மணிக்கு, காவல் நிலையத்தில் உள்ள ஓய்வு அறையில், மேற்கூரையில் பொருத்தப்பட்ட மின் விசிறியில், தனது புடவையைக் கொண்டு தூக்கு போட்டுக் கொண்டு, வசந்தா சந்தேகப்படும் முறையில் இறந்து கிடந்துள்ளார். அந்த நேரத்தில் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் சதாசிவம், தலைமைக் காவலர் சுந்தரமூர்த்தி, முதல்நிலைக் காவலர் குணசேகரன் மற்றும் காவலர்கள் ரஹமத்துல்லா, காசிராஜன் ஆகியோர் காவல் நிலையத்தில் பணியில் இருந்துள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து காவல் துறை உதவி ஆய்வாளர், குற்ற எண் 97/94ல், குற்றவியல் நடைமுறைச் சட்டம், 174-ன்கீழ் வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளார். இந்தச் சம்பவத்தைப் பற்றி அறிந்தவுடன், கடலூர் உதவி ஆட்சித் தலைவரும், காவல் துறை கண்காணிப்பாளரும் காவல் நிலையத்திற்குச் சென்று விசாரணை செய்துள்ளார்கள்.

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1994 மார்ச் 25

முற்பகல் 11.35

இந்த விரும்பத்தகாத சம்பவத்தில், சந்தேகமான முறையில் மரணம் அடைந்த வசந்தா, தான் மணந்து கொண்ட கணவரை விட்டுவிட்டு, வேறு ஒருவருடன் வீட்டை விட்டு வெளியேறியவர். வசந்தாவும், சீனிவாசனும் காவல் நிலையத்தில் சரணடைந்தபோது, வசந்தாவின் கணவர் நடேசன் காவல் நிலையத்திற்கு வந்து, தனது இரண்டாவது மனைவியாகிய வசந்தாவை தான் மீண்டும் ஏற்றுக்கொள்ள மறுத்ததாகக் கூறப்படுகிறது. அத்தகையதொரு சூழ்நிலையில், வேறு எந்தவிதமான வழக்கிலும் சம்பந்தப்படாத, வேறு எந்தக் குற்றமும் செய்யாத ஒரு பெண்மணியை, காவல் நிலையத்தில் தங்க வைத்திருக்கக்கூடாது. அதுவும் இரவில் தங்க வைத்திருக்கக்கூடாது. அந்தப் பெண்ணை காவல் துறையினர் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்று ஒப்படைத்திருக்க வேண்டும். குறைந்தபட்சம், அதே மாவட்டத்திலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கோ அல்லது அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லத்திற்கோ அனுப்பி வைத்து, பாதுகாப்பாக அந்தப் பெண்மணி தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்க வேண்டும். நடைமுறையில் உள்ள எல்லா சட்ட விதி முறைகளுக்கும் மாறாக அந்தக் காவல் நிலையத்தில் பணி புரிந்த காவல் துறை அலுவலர்களும், காவலர்களும் திருமதி வசந்தாவை காவல் நிலையத்திற்குள்ளேயே தங்க அனுமதித்ததும், தங்க வைத்ததும் சற்றும் ஏற்புடையதல்ல. குற்றவியல் நடைமுறை சட்டத்தின் (Criminal Procedure Code)-படி இவர்களது செய்கை சரியானதல்ல. மேலும் அந்தச் செய்கை, காவல் துறை இயக்குனரால், சுற்றறிக்கை மூலமாக அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட விதி முறைகளுக்கும் முற்றிலும் முரணானது ஆகும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்குப் புறம்பாகவும், காவல் துறை இயக்குனரின் தலைமை அலுவலகச் சுற்றறிக்கையில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு எதிராகவும் அந்தப் பெண், காவல் நிலையத்திற்குள் இரவு தங்க அனுமதிக்கப்பட்டதால்தான், அந்தப் பெண்ணின் சந்தேக மரணம் நிகழ்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் மத்தியிலும் இந்தச் சம்பவம் குறித்து பல சந்தேகங்கள் ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அந்தப் பெண்மணி கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டுள்ளதாக சந்தேகம் எழுந்துள்ள காரணத்தால் முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளர் எம். சதாசிவம், தலைமைக் காவலர் சுந்தரமூர்த்தி, முதல் நிலைக் காவலர் குணசேகரன் மற்றும் காவலர்கள் ரஹமத்துல்லா, காசிராஜன் ஆகிய 5 பேர்மீதும் இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 376 (2), அதாவது தனது

பாதுகாவலில் உள்ள அல்லது பாதுகாப்புக்காக ஒப்படைக்கப்பட்ட பெண்ணை அரசாங்க அலுவலர் ஒருவர் கற்பழித்தல்; பிரிவு 302, அதாவது கொலைக் குற்றம்; மற்றும் பிரிவு 201, அதாவது சாட்சியங்களை அழித்தல் குற்றம் போன்ற பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்றப் பிரிவு புலனாய்வுத் துறைக்கு Crime Branch CID,-க்கு மேல் விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது. விரும்பத்தகாத இந்த சம்பவத்தில், சம்பந்தப்பட்டக் காவலர்கள் 5 பேரும் ஏற்கெனவே தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்கள் 5 பேரும் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி வசந்தாவின் உடல் பிரேத பரிசோதனைக்குப் பின்பு அவரது கணவர் நடேசனிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு விட்டது. Crime Branch CID, இந்த வழக்கின் மீதான விசாரணையை துரிதமாக மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தவறுகளோ, குற்றங்களோ எங்கே நடந்தாலும், அவை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது நிச்சயமாக அதுபோன்ற தவறுகள் செய்பவர்கள், குற்றம் புரிபவர்கள் யாராக இருந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் மீது தக்க நடவடிக்கையை எடுப்பதிலும்; மீண்டும் எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நிகழா வண்ணம் தடுப்பதற்கான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதிலும் எங்கள் அரசு தயங்காது. இந்தச் சம்பவத்திலும் சட்ட விதி முறைகளுக்கு முரணாகச் செயல்பட்ட காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள்மீது, இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் நேரடியாக வழங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. CB-CID விசாரணையை மேற்கொண்டுள்ளது. எனவே எங்கள் அரசு தவறு செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்பதையும், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் இன்றி நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11.40

4. கவன ஈர்ப்பு.

(அ) பரம்பிக்குளம் - ஆளியாறு முதல் மண்டலம் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடாததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் வி.பி. சந்திரசேகர் மற்றும் நா. சா. பழனிசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப்